**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம் - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின், 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1958 இன் 04 ஆம் இலக்க இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன சட்டத்தின் 14 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, கூட்டுத்தாபனத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை

எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். அத்துடன் அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படாவிடின் எனது அபிப்பிராயத்தை வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியம இலக்கம் 08 இன் பந்தி 42 மற்றும் பந்தி 43 இன் பிரகாரம் முன்னைய ஆண்டுகளின் போது ஏற்பட்டிருந்த தவறுகள் இறந்த காலத்திற்கு பொருத்தமாக சீராக்கல்கள் மேற்கொண்ட பின்னர் மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனம் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உரிமைகள் மூலதனத்தில் மாற்றங்கள் கூகூற்றில் காட்டப்பட்டிருந்த ரூபா 151.63 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டின் ரூபா 170.45 மில்லியன் தொகைக்கான தவறுகளை சரி செய்வதற்குரிய ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருக்கவில்லை. | இந்த குறைபாடு 2023 நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 08 இன் பந்தி 42 மற்றும் பந்தி 43 இன் பிரகாரம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் குறிப்பிட்ட சரிசெய்தல்களின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் கணக்குகளில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை நிதி அறிக்கையிடல் நியமம் 13 இன் 27 ஆம் பந்தியின் பிரகாரம் நிதி அல்லாத சொத்துக்கள் நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். கூட்டுத்தாபனத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த விபரங்களின் பிரகாரம் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 16 தோட்டத் தொகுதிகளில் 71.38 தொகை ஹெக்டயாரை கொண்ட வலகந்துவ தோட்டத் தொகுதி ரூபா 620 மில்லியனிற்கு பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருந்ததுடன், 20 பிராந்திய தோட்டக் கம்பனிகளுக்கு 53 வருடத்திற்கான நீண்ட கால குத்தகை அடிப்படையில் சாட்டப்பட்டிருந்த 280 காணிகளின் முதலீட்டு ஆதனப் பெறுமதி ரூபா 1,611.52 மில்லியன் தொகை என காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் கூட்டுத்தாபத்திற்கு சொந்தமான 15 தோட்டங்களுக்குரிய | இந்தப் பெறுமதிகள் எமது நிதிக்கூற்றுக்களில் உட்படுத்துவதற்கு தகைமையுடையனவா என்பது தொடர்பாக தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிவுரையினை பெற்றுக்கொண்டு அதன் பின்னர் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்க்கிறோம். கூட்டுத்தாபனத்தின் 15 தோட்டத் தொகுதிகளுக்குரிய காணி நியாயமான பெறுமதிக்கு பெறுமதி மதிப்பீடு செய்து இதுவரை நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பித்திருக்காததுடன், அந்த காணிகளின் பெறுமதி மதிப்பீடு செய்தல் அலுவல்கள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | அனைத்து காணிகள் மற்றும் தோட்டங்களின் நியாயமான பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 10,918 ஹெக்டயர் தொகை எந்தவொரு அடிப்படையிலும் கணக்கீடு செய்யப்பட்டிருக்காததுடன், காணி அபிவிருத்தி பெறுமதி என ரூபா 25.35 மில்லியன் தொகை மாத்திரம் நிலையான சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. மேலும், கொழும்பு 10 இல் அமைந்துள்ள தலைமை அலுவலக காணி வங்கி மதிப்பீட்டின் படி ரூபா 590 மில்லியன் தொகை எனினும், நிதிக்கூற்றுக்களில் ரூபா 4.03 மில்லியன் தொகை என காட்டப்பட்டிருந்தது. அதன்படி, கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான காணிகள் நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டிருந்து. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பந்தி 57 இன் பிரகாரம் நிறுவனத்தின் சேவை நலன் பகிர்வுக் கணிப்பின் போது ஆயுட் கணிப்பு முறை பயன்படுத்தல் மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் ரூபா 643.92 மில்லியனிற்கான ஊழியர் நலன் கணிப்பீட்டின் போது ஆயுட் கணிப்பீடு முறை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. . | ஆயுட் கணிப்பீட்டு முறைக்காக ஆயுட் கணிப்பீட்டாளர் ஒருவரின் (Actuary) சேவை பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த சேவையை பெற்றுக்கொள்வதற்காக இலங்கையில் அமைந்துள்ள சில நிறுவனங்கள் மாத்திரம் காணப்படுவதுடன். அவர்ளின் சேவையை பெற்றுக்கொள்வதற்காக பாரிய செலவொன்று மேற்கொள்வதற்கு நேரிடும். இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் தற்போது முகம்கொடுத்துள்ள நிதி நெருக்கடியின் காரணமாக இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் மேற்கொள்ள முடியாமல் உள்ளமையால் எதிர்காலத்தில் இதற்குத் தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சேவை நலன்கள் ஈடுபாட்டுப் பொறுப்புக்களை கணிக்கும் போது நியமத்தின் பிரகாரம் ஆயுட் கணிப்பு முறை பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் பந்திகள் 12 மற்றும் 30 இல் மற்றும் கணக்கீட்டுக் கொள்கை இலக்கம் 3.1.4.2 படி நுகர்வு இனவிருத்திச் சொத்துக்களை ஆரம்ப இனங்காணும் போது மற்றும் அனைத்து அறிக்கையில் காலப் பகுதி ஒன்றின் இறுதியிடல் விற்பனைக்கான செலவுகளை கழித்த பின்னர் | கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுடன் இணங்குவதுடன், நுகர்வு இனவிருத்தி சொத்துக்களின் பெறுமதி மதிப்பீடு செய்வதற்கான ஆரம்ப கட்ட நடவடிக்கையாக அனைத்து தோட்டத் | நிதிக்கூற்றுக்களில் கணக்குக் குறிப்புக்களில் 3.1.4.2 கொண்ட கணக்கீட்டுக் கொள்கையின் படி நுகர்வு இன விருத்திச் சொத்துக்களின் நியாயமான பெறுமதிக்கு கணக்கீடு |

| | | | |
|---|---|---|---|
| | நியாயமான பெறுமதிக்கு கணிக்கப்பட வேண்டுமென காட்டப்பட்டிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தின் 14 தோட்டங்கள் பூராகவும் பரவியிருந்த மர அறுவடை செய்யக்கூடிய 99,502 மரங்கள் உட்பட கிராண்டிஸ், அல்பீஸியா, தேக்கு, யுகலிப்டஸ் போன்ற வன பயிர்கள் செய்கைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் முறையான பெறுமதி மதிப்பீடொன்றின்றி நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 3,360.58 மில்லியன் தொகையென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | தொகுதிகளிலும் காணப்படும் வாணிபப் பெறுமதியுடைய அனைத்து மரங்களும் தற்போது இலக்கமிடப்பட்டு நிரலிடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தற்போது இது தொடர்பாக பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்று தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | செய்யப்பட வேண்டும். |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 41 இன் 43 ஆம் பந்தியின் பிரகாரம் இனவிருத்திச் சொத்துக்கள், முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாத பயிர்கள் என வெவ்வேறாக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டிற்கான நிதி நிலைமைக் கூற்றில் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 29.31 மில்லியன் இற்கான தெங்கு, இறப்பர், மிளகு ஆகிய இனவிருத்திச் சொத்துக்களின் பெறுமதி அவ்வாறு வகைப்படுத்தப்பட்டு சமர்ப்பித்திருக்கவில்லை. | 2021 ஆண்டு முதல் தேயிலைப் பயிர்கள் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதவை என வெவ்வேறாக நிதிக் கூற்றுக்களில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், தெங்கு, இறப்பர், மிளகு போன்ற ஏனைய இனவிருத்திச் சொத்துக்கள் இதுவரை முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதவை என வெவ்வேறாக நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிக்க முடியாமல் இருந்தது. எவ்வாறாயினும், ஏனைய பயிர்கள் இடையே அனேகமான பயிர்கள் 04 வருடங்களை விட பழமையானவையாக காணப்பட்டதுடன் அவை தற்போதும் முதிர்வு மட்டத்தையடைந்துள்ளது. அதன் காரணமாக எதிர்காலத்தில் புதிதாக சேகரமாகும் ஏனைய பயிர்களுக்கான செலவுகள் முதிர்வடைந்த மற்றும் முதிர்வடையாதவை என வேறுபடுத்தி நிதிக்கூற்றுக்களில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இனவிருத்திச் சொத்துக்கள் முடிவடைந்த மற்றும் முதிர்வடையாத பயிர்கள் என வெவ்வேறாக வகைப்படுத்தி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மரங்கள் விற்பனையின் மூலம் ரூபா 96.11 மில்லியனிற்கான வருமானமொன்று உழைத்த போதிலும், அந்த மரங்களின் கிரயம் ஆண்டிற்கான நுகர்வு இனவிருத்திச் சொத்துக்கள் மீதியிலிருந்து கழித்திருக்காமையால், கூட்டுத்தாபனத்தின் நுகர்வு இனவிருத்தி சொத்து மீதி அத் தொகையினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தது. | ரூபா 96.106 மில்லியன் தொகை தொடர்பாக வெட்டி அகற்றப்பட்ட மரங்களின் கிரயம் 2022 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் சந்தர்ப்பம் அளவில் இனங்காண முடியாமல் போனதால் இனவிருத்திச் சொத்துக்கள் மீதியிலிருந்து கழித்துக் காட்டுவதற்கு முடியாமல் இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக இனவிருத்திச் சொத்துக்களின் சீராக்கல் மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) | ஆண்டிற்கான நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 0.19 மில்லியன் தொகை ஆண்டிற்கான வட்டி வருமானம் என கணக்கீடு செய்யாமல் நிலையான வைப்புக்கள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிலையான வைப்புக்கள் அந்தத் தொகையினால் மிகைக் கணிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன், நிலையான வைப்பு வட்டி சமமான பெறுமதியினால் குறைவாக கணிக்கப்பட்டிருந்தது. | மக்கள் வங்கியின் இலக்கம் 0466001000056675 கொண்ட நிலையான வைப்புக் கணக்கு தொடர்பாக 2022.09.21 திகதி முதல் 2022.12.31 திகதி வரையான காலப் பகுதிக்குரிய பெறவேண்டிய வட்டி என ரூபா 186,355 இற்கான தொகை 2022 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது நிலையான வைப்புக் கணக்கின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் இந்த சிக்கல் உருவாகியிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் சரியாக வட்டி சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | காசுப்பாய்ச்சல் கூற்றின் படி முதலீட்டு தொழிற்பாடுகளின் மூலம் காசு வெளிப்பாய்ச்சலில் நிலையான வைப்புக்களில் முதலீடு ரூபா 0.36 மில்லியன் தொகை எனினும், நிலையான வைப்பு அட்டவணையின் படி அது ரூபா 0.24 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் காசு வெளிப்பாய்ச்சல் பெறுமதி ரூபா 0.12 மில்லியன் தொகையினால் மிகையாக கணிக்கப்பட்டிருந்தன. | மீளாய்வாண்டின் காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டுத் தொழிற்பாடுகள் தொடர்பாக காசுப்பாய்ச்சலின் கீழ் நிலையான வைப்புக்களில் முதலீடுகள் என காட்டப்பட்டிருந்த ரூபா 359,413 இற்கான பெறுமதியில் 2022.09.20 முதல் 2022.12.31 வரையான காலப் பகுதிக்குரிய வட்டி வருமானம் ஒன்று உட்படுத்தப்பட்டிருந்தது. அதன் காரணமாக கணக்காய்வு அறிக்கையில் காட்டப்பட்டிருந்த பிரகாரம் முதலீட்டுத் தொழிற்பாடுகள் மூலம் காசு உட்பாய்ச்சல் ரூபா 239,760 தொகை என சரி செய்யப்படும். | நிதிக்கூற்றுக்களில் சரியாக காசு வெளிப்பாய்ச்சல் சீராக்கல்கள் மேற்கொள்ள வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகள் இடையே மற்றும் ஒவ்வொரு தோட்டத் தொகுதியிடையே மேற்கொள்ளப்படும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக அறிவிப்பதற்காக பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்கு வருட இறுதியில் சமப்பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு தீர்க்கபடாத ரூபா 156.62 மில்லியனிற்கான வரவு மீதியொன்று காணப்பட்டதுடன், அதனை ஏனைய கடன்பட்டோர் என நடைமுறைச் சொத்துக்களில் உட்படுத்தப்பட்டிருந்தது. அதன்படி, நடைமுறை கணக்கு முறைப் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | 2022 ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்களில் தலைமை அலுவலகம் மற்றும் தோட்டத் தொகுதிகள் இடையிலான நடைமுறைக் கணக்குகளில் ஆண்டிறுதியில் உள்ளவாறு ஒன்றிற்கு ஒன்று சமப்படாத ரூபா 156,615,421 இற்கான மீதியுள் காணப்படுவது 2021 ஆண்டிற்கு முன்னர் காணப்பட்ட சமப்படாத மீதிகளின் கூட்டுத்தொகையொன்றாகும். 2021 மற்றும் 2022 ஆண்டுகளுக்குரிய அனேகமான மீதிகள் சமப்படுத்தப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டிற்கு முன்னர் இருந்து முன்கொண்டு வரப்பட்டிருந்த மேற்கூறிப்பிட்ட மீதிகள் தொடர்பாக மேலும் கண்டறிந்து 2023 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இயலுமான அளவு சரி செய்யப்படும். | நடைமுறைக் கணக்கு மீதிகள் சரியாக சமப்படுத்தப்பட வேண்டும். |

**1.5.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் மற்றும் அறிக்கைகள்**

| | **விடயம்** | **நிதிக் கூற்றுக்களின் படி பெறுமதி**<br>**ரூபா** | **நேரொத்த அறிக்கைகளின் படி பெறுமதி**<br>**ரூபா** | **வித்தியாசம்**<br>**ரூபா** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|---|
| (அ) | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் | 442.44 மில்லியன் | 329.92 மில்லியன் | 112.53 மில்லியன் | நீண்ட காலமாக சரியான நிலையான சொத்துப் பதிவேடொன்று காணப்படாமை இந்த வித்தியாசத்திற்கான காரணமாக உள்ளது. | ஆதனங்கள் பொறித்தொகுதிகள் தொடர்பான வித்தியாசங்களை கண்டறிந்து தேவையான இணக்கங்கள் மேற்கொண்டு சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | போஷாக்கு இன விருத்தி சொத்துக்கள் | 421.33 மில்லியன் | 421.24 மில்லியன் | 0.09 மில்லியன் | மா மற்றும் வாழை பயிர்ச்செய்கைக்குரிய பெறுமதி அட்டவணையில் உட்படுத்தப்பட்டிருக்காததுடன், ரூபா 94,862.42 தொகைக்கான அப்பெறுமதி | போஷாக்கு இன விருத்தி சொத்துக்களின் வித்தியாசம் தொடர்பாக கண்டறிந்து |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | மற்றும் தேயிலை, மிளகு, இறப்பர், கமுகு, கருவா ஆகிய பயிர்ச் செய்கைகளுக்குரிய ரூபா 20,981 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்படுவதுடன், அவ் வித்தியாசத்திற்கான காரணத்தை கண்டறிந்து சரி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | தேவையான இணக்கங்கள் செய்து சரி செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | வங்கி மீதி | 4.33 மில்லியன் | 4.27 மில்லியன் | 0.06 மில்லியன் | வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் ரூபா 4,237,303 தொகை என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் பல தோட்டத் தொகுதிகளில் பிரதான வங்கிக் கணக்கிற்கு மேலதிகமாக ரூபா 36,482.89 இற்கான வங்கி மீதிகள் காணப்பட்டதுடன், அது கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் குறிப்பிடப்பட்ட பெறுமதியுடன் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.<br>மீதியான வித்தியாசத்திற்கான காரணமாவது கோமர தோட்டத் தொகுதிக்கு உரிய வங்கிக் கணக்கின் மீதி, கணக்கீட்டு பக்கேஜின் கையில் காசுக் கணக்கில் பதிவு செய்யப்பட்டிருத்தல், கையில் காசு கணக்கில் மீதி வங்கிக் கணக்கு மீதி என பதிவு செய்யப்பட்டிருப்பதனாலேயே ஆகும். மேலும், 2019 மற்றும் 2021 ஆகிய வருடங்களில் பல தோட்டத் தொகுதிகளுக்குரிய ஆரம்ப வங்கி மீதிகளில் காணப்பட்ட வித்தியாசமொன்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள வித்தியாசத்திற்கான காரணமாகும். | வங்கி மீதியில் காணப்படும் வித்தியாசங்கள் தொடர்பாக கண்டறிந்து தேவையான சீராக்கல்கள் மேற்கொண்டு சரி செய்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| | விடயம் | தொகை ரூபா | சமர்ப்பிக்கப்படாத கணக்காய்வுச் சான்றுகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதி | 176.7 மில்லியன் | மீதியை உறுதிப்படுத்தல்கள், அட்டவணைகள் | தலைமை அலுவலகத்தின் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளுள் அடங்கியுள்ள ரூபா 233.571 மில்லியனிற்கான மீதிகளுக்காக மீதிகளை உறுதிப்படுத்தல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியும். 2023 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த மீதிகளில் நீண்ட காலமாக முன்கொண்டு வரப்பட்ட இதுவரை தீர்க்கப்படாத மீதிகள் தொடர்பாக மேலும் ஆய்வு செய்து தேவையான பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதி | 144.83 மில்லியன் | மீதியை உறுதிப்படுத்தல்கள், பிற்காலத்தில் தீர்த்தல் தொடர்பான தகவல்கள் | இந்த மீதிகள் தொடர்பாக கணக்காய்விலிருந்து விளக்கங்கள் பெற்றுக்கொண்டு அது தொடர்பாக கணக்காய்விற்கு தகவல்கள் வழங்கப்படும். | மீதிகளை உறுதிப்படுத்தல்கள் மற்றும் பிற்காலத்தில் தீர்த்தல் கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட வேண்டும். |

### 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதித் திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 301.44 மில்லியனிற்கான வர்த்தக மற்றும் ஏனைய பெறவேண்டிய மீதிகளில் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா | 05 வருடங்களுக்கு மிகையான கடன்பட்டோர் மீதியை அறவீடு செய்தல் நிச்சயமற்ற தன்மையொன்று காணப்படுவதால் 2012 ஆண்டில் | நீண்ட காலமாக பெறவேண்டிய மீதிகளை தீர்த்துக்கொள்வதற்காக போதியளவு |

| | | | |
|---|---|---|---|
| | 52.88 மில்லியன் தொகை காணப்பட்டதுடன், 01 வருடத்தை விட மிகையான மீதி ரூபா 10.58 மில்லியன் தொகை காணப்பட்ட போதிலும், அந்தத் தொகையினை தீர்த்துக்கொள்வதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாமல் இருந்ததுடன் அதற்காக ஏற்பாடுகளும் மேற்கொண்டிருக்கவில்லை. | அந்த மீதிகளுக்காக ஐயக்கடனின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. மீதியான கடன்பட்டோரின் இரண்டு வருடங்களுக்கு மிகையான பழமையான கடன்பட்டோர் மீதிகளை அறவீடு செய்தல் தொடர்பாக தேவையான அலுவல்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அறவீடு செய்தல் தொடர்பாக சிக்கல் தன்மை காணப்படும் மீதிகளுக்காக 2023 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஐயக் கடனின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நடவடிக்கைகள் விரைவாக எடுக்க வேண்டும். |

### 1.6.2 செலுத்த வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு இறுதியளவில் கூட்டுத்தாபனம் மக்கள் வங்கியிலிருந்து ரூபா 147.58 மில்லியனிற்கான மேலதிகப் பற்றொன்று பெற்றுக்கொண்டிருந்ததுடன், 2020 ஆண்டின் போது பெற்றிருந்த ரூபா 100 மில்லியனிற்கான கடன் தொகையின் பகுதியொன்றை ஏதும் வங்கிக்கு செலுத்துவதற்கு மீளாய்வாண்டில் நிலவிய சீரற்ற நிதி நிலைமையின் காரணமாக முடியாமல் போனது. அதேபோல் 2022 ஆண்டிற்கான வங்கி மேலதிகப்பற்று மற்றும் கடன்தொயின் வட்டி என ரூபா 40.07 மில்லியன் தொகையினை செலுத்த வேண்டியிருந்த போதிலும், அவற்றில் ரூபா 6.54 மில்லியன் தொகை மீளாய்வாண்டு இறுதி வரை செலுத்தியிருக்வில்லை. மேலும், இந்த வங்கிக் கடன் மற்றும் மேலதிகப் பற்று மீதியினை 05 வருடங்களுக்கான நீண்ட கால கடன்தொகை என மீள்கட்டமைக்கும் கலந்துரையாடல் ஒன்று நடாத்தப்படுகின்றது என முகாமையினால் வரைவு கணக்காய்வு அறிக்கைக்காக வழங்கப்பட்ட பதிவின் மூலம் அறிவிக்கப்பட்டது. | எமது கூட்டுத்தாபனத்தில் நீண்ட காலம் முதல் நிலவும் நிதி நெருக்கடி காரணமாக நாளாந்த செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்வதற்கு போதியளவு நிதிப்பாய்ச்சல் காணப்படாமை, 2020 ஆண்டில் ரூபா 100 மில்லியனிற்கான இந்த வங்கிக் கடன் பெற்றுக்கொள்வதற்கு முக்கிய காரணமாக இருந்தது. மேற்கூறிய ரூபா 100 மில்லியனிற்கான கடன் தொகைக்குரிய தவணைப் பணம் கூட்டுத்தானத்தில் நிலவும் சீரற்ற நிதி நிலைமையினால் உரிய நேரத்தில் செலுத்துவற்கு முடியாமல் போனது. எனினும், 2022 ஆண்டின் போது வங்கிக் கடன் வட்டி என கூட்டுத்தாபனத்தினால் ரூபா 9.31 மில்லியன் தொகை செலுத்தப்பட்டது. மேலும், இதுவரை இந்தக் கடன் தொகையில் ரூபா 21 மில்லியன் தொகை வங்கிக்கு செலுத்தப்பட்டது. இந்த குறுகிய கால கடன்தொகையை மற்றும் வங்கி மேலதிக பற்றினை நீண்ட கால கடன்தொகை என மாற்றுவதற்கு தேவையான | கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடி தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொண்டு இந்த கடன் மீதிகள் மற்றும் வட்டியை தீர்த்துக்கொள்வதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அலுவல்கள் மக்கள் வங்கியுடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அதற்குரிய கடன் தவணைகள் 05 வருடங்களுக்குள் செலுத்தி முடிப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | |
| (ஆ) | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 05 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 228.81 மில்லியனிற்கான 08 கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட்டதுடன், அவற்றில் சிலாபம் பெருந்தோட்டக் கம்பனிக்கு ரூபா 33 மில்லியன் தொகையும், லங்கா மினரல் ஸேண்ட் கம்பனிக்கு ரூபா 25 மில்லியன் தொகையும், உரக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 35 மில்லியன் தொகையும், அரச மூலவளக் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 28 மில்லியனும் மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு ரூபா 97 மில்லியன் தொகையும் அடங்கியிருந்த போதிலும், அந்தத் தொகைகளை தீர்ப்பதற்கு கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நீண்ட காலம் முதல் கூட்டுத்தாபனம் முகம்கொடுத்துள்ள நிதி நெருக்கடி காரணமாக இந்தக் கடன் தொகைகளை திருப்பி செலுத்துவதற்கு முடியாமல் போனது. | கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடி தொடர்பாக முறையான ஆய்வொன்று மேற்கொண்டு இந்த கடன் மீதிகளை தீர்ப்பதற்கு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | | | | |
|---|---|---|---|---|
| **சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு** | | **இணங்காமைகள்** | **முகாமைத்துவத்தின் கருத்துரை** | **பரிந்துரை** |
| (அ) | 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தின் பிரிவுகள் 15 மற்றும் 16 மற்றும் 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியச் சட்டத்தின் பகுதி II பந்திகள் 16(i) மற்றும் 27 | கூட்டுத்தாபனத்தின் ரூபா 637.48 மில்லியனிற்கான ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்பு, ரூபா 46.01 மில்லியனிற்கான ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்பு, ரூபா 53.06 மில்லியனிற்கான தோட்டப் பதவியணி சேமலாப நிதியச் சங்கத்தின் பங்களிப்பு மற்றும் ரூபா 14.48 மில்லியனிற்கான இலங்கை பெருந்தோட்டக்காரர்களின் சேமலாப நிதிய சங்கத்தின் பங்களிப்புத் தொகை மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை செலுத்துவற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. 2022 திசெம்பர் 31 திகதியில் | நிதி நெருக்கடியின் காரணமாக இந்த கொடுப்பனவுகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு முடியாமல் போனது. 2021 ஆண்டில் தொழிலாளர் சம்பளம் 34 சதவீதத்தினால் அதிகரித்தல், இரசாயன உரம் இறக்குமதி தடைசெய்யப்படல் உடன் எங்கள் தோட்டத் தொகுதிகளுக்கு தேவையான உரம் வங்குவதற்கு முடியாமல் போனமையால் கொழுந்து விளைச்சல் குறைவடைதல், கொவிட்-19 தொற்றுநோய் | தற்போதயை பங்களிப்புத் தொகைகளை உரிய முறையில் செலுத்த வேண்டியதுடன் செலுத்தப்படாத பங்களிப்புத் தொகை தொடர்பான சிக்கலை விரைவாக தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உள்ளவாறு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்காக செலுத்த வேண்டிய மிகை விதிப்புப் பெறுமதியினை சட்டத்தின் பிரகாரம் தயாரித்திருக்காததுடன், வழக்கு நடவடிக்கைகளின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த முறையே 77.73 மில்லியன் தொகை மற்றும் ரூபா 6.43 மில்லியன் தொகை மாத்திரம் மிகை விதிப்பு என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | காரணமாக நாட்டின் பொருளாதார அலுவல்கள் நலிவடைந்ததுடன், எமது வானிப மரத்திற்காக காணப்பட்ட கேள்வி குறைவடைந்தமையும் காரணமாக இருந்தது. 2023 செப்தம்பர் மாதம் முதல் சட்ட பூர்வமான கொடுப்பனவுகளுக்குரிய வழக்குகள் தொடர்பாக உரிய தரப்பினருக்கு கொடுப்பனவு மேற்கொள்வதற்காக திறைசேரியினால் மாதாந்தம் ரூபா 21.3 மில்லியன் தொகையொன்று வழங்குவதற்கு இணங்கியுள்ளதுடன், அதற்கான ஆரம்ப மற்றும் இரண்டாம் பணம் வழங்குதல் 2023 செப்தம்பர் மற்றும் ஒக்தோபர் ஆகிய மாதங்களில் மேற்கொள்ளப்பட்டது. | |
| (ஆ) | 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவு சட்டத்தின் பகுதி II இல் பிரிவு (5)(1) | ஊழியர் ஒருவர் ஓய்வு பெற்ற அல்லது இறப்படைந்த நாள் முதல் 30 நாட்களுக்குள் பணிக்கொடை கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு பணிக்கொடை தொகை குறிப்பிட்ட நாளில் செலுத்தப்படாமையால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய பணிக்கொடை கொடுப்பனவு பெறுமதி ரூபா 552.31 மில்லியன் தொகையாக இருந்தது. 2022 ஆண்டு இறுதி அளவில் பணிக்கொடையிற்காக செலுத்த வேண்டிய மிகை விதிப்புப் பெறுமதி சட்டத்தின் பிரகாரம் | நிதி நெருக்கடியின் காரணமாக இந்த கொடுப்பனவுகளை உரிய முறையில் செலுத்துவதற்கு முடியாமல் போனது. தொழிலாளர் சம்பளம் 34 சதவீதத்தினால் அதிகரித்தல், இரசாயன உரம் இறக்குமதி தடைசெய்யப்படல், கொவிட்-19 தொற்றுநோய் மற்றும் எமது வானிப மரங்களுக்கு காணப்பட்ட கேள்வி குறைவடைதல் போன்ற காரணமாக கூட்டுத்தாபனத்தின் நிதி நெருக்கடி மேலும் தீவிர மட்டத்தை அடைந்தது. | சட்டபூர்வமான பொறுப்புக்களை உரிய முறையில் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தயாரித்திருக்காததுடன், வழக்கு அலுவல்களின் மூலம் தீர்மானிக்கப்பட்டிருந்த ரூபா 20.62 மில்லியனிற்கான மிகை விதிப்புத் தொகை ஒன்று கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கங் கொண்ட பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பந்தி 3.1 | அனைத்து எரிபொருள் பரிசோதனைக்கு பின் 12 மாத காலப் பகுதிக்கு பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் ஓட்டத்தின் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பான பிரதான திருத்த வேலையின் பின்னர் ஆகிய விடயங்கள் இடையே முதலில் வரும் சந்தர்ப்பத்தின் பின்னர் எரிபொருள் பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் வாகனங்களுக்காக அவ்வாறான பரிசோதனை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட சுற்றறிக்கையை படித்து எரிபொருள் எரிவுப் பரிசோதனை எவ்வாறு மேற்கொள்ளப்பட வேண்டும் என ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்த பரிசோதனைக்காக மிகை கிரயம் ஒன்று மேற்கொள்ள நேரிடுவதனால் கூட்டுத்தாபனத்தின நிதி நிலைமையும் இதற்கு தடையாக உள்ளது. எதிர்காலத்தின் நிறுவனத்தின் உயர் முகாமைத்துவத்துடன், கலந்துரையாடி குறிப்பிட்ட சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் படி எரிபொருள் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | 2018 மார்ச் 19 திகதிய 01/2018 இலக்கங் கொண்ட சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 2 (அ) மற்றும் 2015 ஜுலை 10 திகதிய 02/2015 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பந்தி 02 | தோட்டத் தொகுதியில் மற்றும் தலைமை அலுவலகத்தில் தற்போது பயன்படுத்த முடியாத அகற்றக் கூடிய நிலைமையில் காணப்படும் 15 லொறி வண்டிகள், 09 டிரக்டர் மற்றும் டேலர்கள், 06 கார்கள், 05 ஜீப்கள் மற்றும் 01 நோயாளர் காவு வண்டி, 30 மோட்டார் சைக்கிள் மற்றும் நீர்பவுஸர் ஒன்று ஆக மொத்தம் 67 வாகனங்கள் கணக்காய்வு திகதி அளவிலும் அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிறுவனத்தின் அனைத்து வாகனங்கள் தொடர்பாக பரிசோதனை மேற்கொண்டு தற்போது ஓட்ட நிலையில் காணப்படும் வாகனங்கள் மற்றும் ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்கள் தனித்தனியாக இனங்காணப்பட்டுள்ளது. மோட்டார் வாகன திணைக்களத்தின் உத்தியோகத்தர்களினால் பரிசோதனை மேற்கொண்டு பயன்பாட்டிற்கு உதவாத பண்டங்கள் விற்பனை செய்வதற்கு 61 வாகனங்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் பயன்படுத்த முடியாத வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், திருத்த வேலை மேற்கெள்ளக் கூடிய வாகனங்களை முறையான திருத்த வேலை மேற்கொண்ட பின்னர் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும். |

## 1.8 வரி பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 இன் 24 இலக்க உள்நாட்டு இறைவரி (திருத்திய) சட்டத்தின் பிரிவுகள் 90 மற்றும் 93 இன் பிரகாரம் வியாபாரம் ஒன்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தின் மீது சுய மதிப்பீட்டு அடிப்படையில் காலாண்டு ஒன்று இறுதியில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு முறையே ஆகஸ்ட் 15, நவம்பர் 15, பெப்ரவரி 15 மற்றும் அடுத்த ஆண்டு மே 15 ஆகிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னர் வருமான வரி செலுத்த வேண்டும். மீதி வரித்தொகை காணப்படின் அதனை அடுத்த ஆண்டு செப்தம்பர் 30 திகதி அல்லது அதற்கு முன்னர் செலுத்த வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனத்தினால் அவ்வாறு வரித் திரட்டுகள் கடந்த 15 வருட காலத்திற்கு மிகையான காலம் முதல் சமர்ப்பித்திருக்கவில்லை. 2022 ஆண்டிற்கான கணக்கீட்டு இலாபம் ரூபா 19.67 மில்லியன் தொகை காணப்பட்ட போதிலும் சுய மதிப்பீட்டின் படி உரிய வருமானவரி திரட்டு 2023 ஆகஸ்ட் 31 திகதி அளவிலும் அனுப்பியிருக்கவில்லை. கடந்த 27 வருட காலப் பகுதியில் (1995-2021) 4 ஆண்டுகளில் மாத்திரம் இலாபம் உழைத்திருந்தமையால் வரி செலுத்தும் தேவைப்பாடொன்று ஏற்படாது என நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தினால் 2022 ஆண்டு தவிர முன்னைய நிதி ஆண்டுகளின் போது தொடர்ச்சியாக நட்டம் அறிவிக்கப்பட்டிருந்தமையால் முன்னைய ஆண்டுகளுக்காக இதுவரை வருமான வரி திரட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. 2022 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்தினால் ரூபா 19.672 மில்லியனிற்கான இலாபம் ஒன்று ஈட்டியுள்ளது. 2022 ஆண்டிற்குரிய வருமான வரித் திரட்டு வருமான வரி ஆலோசகரின் உதவியின் மீது தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. மேலும், எம்மால் வருமான வரித் திணைக்கள உத்தியோகத்தர்களை தொடர்புகொண்டு முன்னைய ஆண்டுகளுக்கான வருமான வரித் திரட்டு அனுப்பப்படாமை தொடர்பாக அறிவுரை பெற்றுக்கொண்டு அதன்படி நடவடிக்கை எடுக்கப்படும். | வருமான வரி (திருத்தம்) சட்டத்தின் பிரகாரம் வருமான வரி கணித்தல் மற்றும் செலுத்துதல் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 19,671,760 இற்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேர்மாறாக முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 231,197,596 தொகை ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப ரூபா 250,869,356 இற்கான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இந்த அதிகரிப்பிற்காக முன்னைய ஆண்டிற்கு நேரொப்ப மீளாய்வாண்டின் போது கூட்டுத்தாபனத்தின் தேயிலை கொழுந்து விற்பனை வருமானம் மற்றும் ஏனைய வருமானங்களில் உள்ளடங்கியுள்ள தோட்டங்களில் மற்றும் தலைமை அலுவலகத்தில் ஏனைய வருமானங்கள் முறையே ரூபா 246,355,927 தொகையினால் மற்றும் ரூபா 20,537,781 தொகையினால் அதிகரித்தல் விற்பனவுக் கிரயம் ரூபா 92,553,133 இனால் குறைவடைதலும் பிரதான காரணமாக இருந்தது.

### 2.2 பிரதான வருமான விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு

| | 2022 (ரூபா) | 2021 (ரூபா) | அதிகரித்தல் / (குறைவடைதல்) |
|---|---|---|---|
| வருவாய் | 1,070,663,514 | 845,341,718 | 225,321,796 |
| ஏனைய வருமானங்கள் | 157,979,459 | 194,790,022 | (36,810,563) |
| விற்பனவுக் கிரயம் | 934,986,055 | 1,027,539,188 | (92,553,133) |
| நிருவாகச் செலவு | 224,870,036 | 204,870,371 | 19,999,665 |
| நிதிச் செலவுகள் | 49,115,124 | 38,919,776 | 10,195,348 |

### 2.3 விகிதாசார பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டின் மற்றும் முன்னைய ஆண்டின் நடைமுறை சொத்துக்கள் விகிதாசாரம் 0.21:1 தொகை மற்றும் 0.19:1 தொகையாக காணப்பட்டதுடன், திடீர் சொத்துக்கள் விகிதாசாரம் முறையே 0.19:1 மற்றும் 0.15:1 ஆக காணப்பட்டது. மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டில் வர்த்தக மற்றும் ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளின் பெறுமதி முறையே ரூபா 1,949,734,849 தொகை மற்றும் ரூபா 1,640,065,683 தொகையாக காணப்பட்டு நடைமுறை சொத்துக்களின் பெறுமதி அதிகரித்திருத்தல், நடைமுறை சொத்துகள் மற்றும் திடீர் சொத்துகள் விகிதாசாரங்களில் பின்னடைவிற்கு முக்கிய காரணமாக இருந்தது.

(ஆ) 2022 ஆண்டின் மொத்த இலாப விகிதாசாரம் மற்றும் தேறிய இலாப விதிதாசாரம் முறையே 13 சதவீதம் மற்றும் 2 சதவீதமாக காணப்பட்டதுடன், முன்னைய ஆண்டின் போது மொத்த இலாப வீதாசாரம் மற்றும் தேறிய இலாப வீதாசாரம் முறையே 22 சதவீதம் மற்றும் 27 சதவீதமாக காணப்பட்டமையால் மீளாய்வாண்டில் மொத்த மற்றும் தேறிய இலாப வீதாசாரங்கள் முறையே 35 சதவீதம் மற்றும் 29 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2022 செயல் நடவடிக்கை திட்டத்தின் படி 2022 ஆண்டில் மேலதிக மற்றும் சிறு பயிர்கள் 34.50 ஹெக்டயர்களில் பயிர் செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக செயற்பாடுகள் ஏதும் ஆண்டின் போது மேற்கொண்டிருக்கவில்லை. | 2022 ஆண்டின் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் உட்படுத்தப்பட்டிருந்த சிறு ஏற்றுமதி மற்றும் ஏனைய பயிர்கள் 34.50 ஹெக்டயர்களில் பயிர் செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்த முடியாமல் போனது. | அடையக் கூடிய செயற்பாடுகள் அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அந்தக் குறிக்கோள்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 2022 ஆண்டின் 18 ஹெக்டயர்களில் மரம் பயிர்ச் செய்யும் இலக்கொன்று கூட்டுத்தாபனத்தில் காணப்பட்ட போதிலும் வருட இறுதி வரை 05 ஹெக்டயர் மாத்திரம் மரம் பயிர்ச் செய்யப்பட்டிருந்தமையால் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி முன்னேற்றம் 28 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. | செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி 18 ஹெக்டயர்களுக்கான மர பயிர்ச் செய்கை செயற்திட்டத்தில் 05 ஹெக்டயர்கள் மாத்திரம் தொழிலாளர் பற்றாக்குறை காரணமாக மேற்கொள்ள நேரிட்டிருந்தது. | அடையக் கூடிய செயற்பாடுகள் அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அந்தக் குறிக்கோள்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கூட்டுத்தாபனத்தினால் ஆண்டின் போது ரூபா 89.66 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 03 தொழிற்சாலைகளுக்கான இயந்திர உபகரணங்களை நவீனமயப்படுத்தும் அலுவல்கள் மற்றும் ஏனைய பராமரிப்பு அலுவல்கள் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், ரூபா 17.33 மில்லியன் தொகை செலவிடப்பட்டு 02 தொழிற்சாலைகளுக்கான அலுவல்கள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அது மொத்த மதிப்பீட்டுச் செலவில் 19 சதவீதம் ஆகும். | 2021 / 2022 ஆண்டுகளின் போது நாட்டில் ஏற்பட்டிருந்த பொருளாதார நெருக்கடி மற்றும் கொரோனா தொற்றுநோய் காரணமாக இறக்குமதி வரையறுக்கப்படல் காரணமாக, தொழிற்சாலைகளுக்கான இயந்திர உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் இறக்குமதி தடைசெய்யப்படல் மற்றும் வரையறுத்தல் காரணமாக 3 ஆவது காலாண்டளவில் அந்த விடயங்களின் கீழ் ரூபா 2.10 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. எனினும், 2022 ஆண்டு இறுதி அரையாண்டளவில் இந்த இறக்குமதி வரையறை முறை இலகுபடுத்தப்பட்டதுடன், கோமர மற்றும் கெலேபொக்க தேயிலைத் தொழிற்சாலைகளுக்கான ரூபா 27 மில்லியன் தொகை மேற்கூறிய விடயங்களுக்காக செலவிடப்பட்டு நவினமயப்படுத்தல் அலுவல்கள் மேற்கொள்வதற்கு முடியுமாக இருந்தது. இதனை மொத்த மதிப்பீட்டுடன் ஒப்பிடும் போது 30 சதவீத அளவினை கொண்டிருந்தது. | அடையக் கூடிய செயற்பாடுகள் அடங்கிய செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரித்து அந்தக் குறிக்கோள்களை நெருங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | 2022 ஆண்டில் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் தேயிலை விளைச்சல் 6,659,726 கிலோகிராமாக காணப்பட்டதுடன், அது மதிப்பீட்டுத் தொகையாகிய 10,338,657 கிலோகிராமுடன் ஒப்பிடும் போது 36 சதவீதத்திற்கான குறைவடைதலொன்று காணப்பட்டதுடன், 2021 ஆண்டிற்கு நேரொப்ப 21 சதவீதத்தினால் பின்னடைவொன்று அவதானிக்கப்பட்டது. 2022 ஆண்டின் போது கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான அனைத்து தோட்டத் தொகுதிகளின் தேயிலை விளைச்சல் 10 சதவீதம் முதல் 35 சதவீதம் வரையான வீச்சில் குறைவொன்று அவதானிக்கப்பட்டது. | 2021 ஆண்டின் உரம் மானிய திட்ட அடிப்படையில் எம்மால் 2021 ஆண்டில் அனைத்து தேயிலை பயிர்ச் செய்கைக்காக மதிப்பீட்டின் 90% விட மிகையான உரத் தொகையொன்று பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்டது. அதன்படி, கூடிய கொழுந்து விளைச்சலொன்றினை பெற்றுக்கொள்ள கூடியதாக இருந்தது. எனினும், 2022 ஆண்டில் ஆரம்ப அரையாண்டில் அரசினால் நாட்டில் இரசாயன உரம் பயன்படுத்துவதை | தேயிலை விளைச்சலை அதிகரிப்பதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்திருந்தது. அங்கு, இரசாயன உரம் தட்டுப்பாடு, உரத்தின் விலை மிகவும் அதிகரித்தல் காரணமாக கூட்டுத்தானத்தின் உழைப்பில் இருந்து உரம் கொள்வனவிற்காக பணம் ஈடுபடுத்துவது கடினமாக இருந்தது. அதன் காரணமாக அனைத்து தோட்டத் தொகுதிகளும் விளைச்சல் 10 சதவீதம் முதல் 35 சதவீத வீச்சில் குறைவடைந்திருந்தது. | |
| (உ) | 2022 ஆண்டின் போது வெளி பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டிருந்த நிலப்பரப்பில் 1,006,605 கிலோகிராமிற்கான விளைச்சலொன்று எதிர்பார்க்கப்பட்ட போதிலும், தேயிலை உண்மையாக 601,960 கிலோகிராம்கள் மாத்திரமே பெற்றுக்கொண்டிருந்தது. அது எதிர்பார்த்த தேயிலை விளைச்சலுடன் ஒப்பீடு செய்யும் போது 40 சதவீத குறைவொன்றாகும். | 2022 ஆண்டில் ஆரம்ப அரையாண்டில் அரசினால் நாட்டில் இரசாயன உரம் பயன்படுத்துவதை நிறுத்துவதற்கு தீர்மானித்திருந்திருந்தது. அங்கு இரசாயன உரத் தட்டுப்பாடு, உரத்தின் விலை மிகவும் அதிகரித்தல் காரணமாக கூட்டுத்தானத்தின் உழைப்பில் உரம் கொள்வனவிற்காக பணம் ஈடுபடுத்தல் கடினமாக இருந்தது. அதன் காரணமாக அனைத்து தோட்டத் தொகுதிகளும் விளைச்சல் 10 சதவீதம் முதல் 35 சதவீத வீச்சில் குறைவடைந்திருந்தது. | வெளி பயிர்ச்செய்கையாளர்களின் தேயிலை விளைச்சலை உயர்த்துவதற்காக உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஊ) | இலங்கை பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் மீளாய்வாண்டின் போது ரூபா 200 மில்லியனிற்கான அமைச்சின் மானியத்தின் மூலம் குறைபயன்பாட்டுக் காணிகள் 180 ஹெக்டயர்களில் 2,250,000 தேயிலைச் செடிகள் தயாரித்தல் மற்றும் நடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், வருட இறுதியளவில் 96.91 ஹெக்டயர் மாத்திரம் நடப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்தின் படி கூட்டுத்தாபனத்தினால் தேயிலைச் செடிகள் தயாரித்து பயிர்ச் செய்வதற்காக திட்டமிடப்பட்ட போதிலும், 1,079,172 தேயிலைச் செடிகள் வெளித் தரப்பினரிடம் ரூபா 28.18 மில்லியன் தொகை செலவிடப்பட்டு கொள்வனவு | குறைபயன்பாட்டுக் காணிகளில் 180 ஹெக்டயர் தேயிலை மீள்பயிர் செய்வதற்காக ரூபா 200 மில்லியன் தொகை பெருந்தோட்ட அமைச்சின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ரூபா 178.64 மில்லியன் மாத்திரமே கிடைத்திருந்தது. 2022.12.31 திகதியில் உள்ளவாறு, மண் தயாரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டிருந்த மொத்தமான கன்றுகள் நடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த காணியின் அளவு 96.91 ஹெக்டயர்கள் ஆகும். இது திருத்தப்பட்ட காணி அளவில் 60 சதவீதத்தை | செயற்திட்டத்தின் ஆரம்ப திட்டத்திற்கு இணங்க கன்றுகள் தயாரித்தல் மற்றும் நடல் மூலம் குறிக்கோள்களை அடைவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| செய்யப்பட்டிருந்ததுடன், 2023 செப்தம்பர் 30 திகதி அளவில் 146 ஹெக்டயர்களில் கன்றுகள் நடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததென கூட்டுத்தாபனத்தின் தலைவரினால் கணக்காய்விற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. | மிகைத்துள்ள எண்ணிக்கையாகும். இந்த செயற்திட்டத்திற்காக அமைச்சிலிருந்து கிடைத்திருந்த மொத்தத் தொகையான ரூபா 178.64 மில்லியனில் ரூபா 126.92 மில்லியன் தொகை கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்தது 2022.11.14 திகதியின் பின்னரே ஆகும். இதன் காரணமாக இந்த செயற்திட்டத்தின் வேலைகள் 2022 ஆண்டின் போது பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது.<br>2023.09.30 திகதி அளவில் இந்த செயற்திட்டத்தின் கீழ் முழுமையாக கன்றுகள் நடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்த காணியின் அளவு 146 ஹெக்டயர்கள் ஆகும். கன்றுகள் நடுவதற்கு மீதியாக உள்ள காணியின் அளவு 14.5 ஹெக்டயர்களிலும் கன்றுகள் நடல் 2023.11.30 திகதி அளவில் பூர்த்தி செய்யப்படும். | |

### 3.2 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 4.2.1(ஆ) பந்தியின் பிரகாரம் குறைந்த அளவு 03 வருட காலத்திற்காக எதிர்பார்த்த பெறுகை அலுவல்களுக்காக பிரதான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், கூட்டுத்தாபனம் 2022 ஆண்டிற்காக மாத்திரம் பெறுகைத் திட்டம் தயாரித்திருந்தது. | 2023 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகைத் திட்டமும் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், பெருந்தோட்டதொழில் அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>2024 ஆண்டு முதல் 03 வருடங்களுக்காக (2024/2025/2026) பெறுகைத் திட்டம் சமர்ப்பிப்பதற்கு தேவையான தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதுடன், அது தயாரிக்கப்பட்ட பின்னர் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிப்பதற்காக திட்டமிடப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.3.11(அ) இன் பிரகாரம் தேசிய போட்டி அடிப்படையில் விலைகூறல் அழைப்பு செய்முறையில் பங்குபற்றும் விலைகூறல்தாரர்களிடம் விலைகூறல் பாதுகாப்பு முறி பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் 11 தோட்டத் தொகுதிகளுக்காக 1,159,600 தொகையான தேயிலை கன்றுகள் கொள்வனவு செய்தலுக்குரிய பெறுகையின் போது விலைகூறல் பாதுகாப்பு முறி பெற்றிருக்காமையால் விலைகூறல்தாரர்களினால் விலைகூறலை ஏற்க மறுத்தமையால் 30,000 கன்றுகள் மாத்திரம் இந்த விலைகூரல்தாரரிடம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. . | தேயிலை கன்றுகள் கொள்வனவு செய்வதற்காக நடாத்தப்பட்ட டென்டரின் போது விலைகூறல் பாதுகாப்பு முறி பெற்றுக்கொள்ளல் நடைமுறை சாத்தியமானதல்ல என, தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினால் பரிந்துரைக்கப்பட்டிருந்ததுடன், அதற்கான காரணமாக அனேக தேயிலை கன்று வழங்குனர்கள் அவர்களின் தொழிலை நடாத்துதல் தனிப்பட்ட முறையிலே ஆகும், தேயிலைக் கன்று வழங்குனர்கள் சிறிதளவு வழங்குனர்களாக காணப்பட்டமையால் விலைகூறல் பாதுகாப்பு முறி கோறியிருந்தால் அவர்கள் விலைகூறல் சமர்ப்பித்தல் தொடர்பாக அறிந்திருக்காமையால் கூட்டுத்தாபனம் பாதுகாப்பு முறி சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தை இழக்கக்கூடும் என அவதானிக்கப்பட்டது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க விலைகூறல் பாதுகாப்பு முறி பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், அதற்கு புறம்பாக நடைமுறை சிக்கல்களுக்காக மாற்று வழிகள் கடைபிடிக்கப்பட வேண்டும். |
| (இ) | வலகந்துவ அரச தோட்டத் தொகுதியில் கன்று நடல் தொடர்பான பெறுகையில் செய்தித்தாள் அறிவித்தலின் படி 20 ஏக்கர் காணிப் பரப்பு ஒன்றில் அந்த விடயம் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், டென்டர் வழங்கும் சந்தர்ப்பத்தில் 15 ஏக்கர் அளவும் வெளிக்களப் பரிசோதனையின் போது 08 ஏக்கர் அளவும் தேயிலைப் பயிர்ச்செய்கைக்கு தகைமையுடையவை என பரிந்துரைக்கப்பட்டிருந்தமையால் பெறுகையின் ஆரம்ப கட்டத்தில் தேவையான காணியின் அளவு உரிய முறையில் இனங்கண்டு பெறுகைக்கு முன்னர் தயார் நிலையில் காணப்படாமையால் பெறுகை வழிகாட்டல் கோவையின் 2.3.1 இன் படி பெறுகை நிறுவனத்தின் பொறுப்பிலிருந்து புறக்கணித்திருந்தது என அவதானிக்கப்பட்டது. அதேபோல், விலைகூறல்தாரர்கள் தெரிவு செய்யும் போது குறைந்த கூறுவிலைகள் | வலகந்துவ தோட்டத் தொகுதியில் 20 ஏக்கர் காணிப் பரப்பில் கன்று நடுவதற்காக திட்டமிடப்பட்டு 15 ஏக்கர் தரையினை தயாரிப்பதற்காக ஒப்பந்த வேலை வழங்கிய பின்னர் பொது முகாமையாளரின் தலைமையின் கீழ் தேயிலை சபை மற்றும் தேயிலை ஆய்வு நிலைய உத்தியோத்தர்களின் பங்குபற்றலுடன் நடைபெற்ற அவதானிப்பு சுற்றுலாவின் போது 08 ஏக்கர் மாத்திரம் இந்த செயற்திட்டத்திற்காக செயற்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன்படி, 2023 ஏப்ரல் அளவில் 06 ஏக்கர் தரைப்பகுதி தயாரிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், தற்போது மீதியான 02 ஏக்கர் தரைப் பகுதியும் தயாரித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | பெறுகைக்கு முன்னர் உள்ள கருமங்கள் முறைப் பிரகாரம் மேற்கொள்வதற்கு மற்றும் செயற்திட்டத்தின் அலுவல்களை விரைவாக மற்றும் செயற்திறனுடன் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பித்திருந்த விலைகூறல்தாரர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்த போதிலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 3.12.2 பிரகாரம் முன்னைய தகைமைகளை பரிசோதித்தல் மேற்கொண்டிருக்காமையால் 2022 நவம்பர் 19 திகதி முதல் இரண்டு மாதங்களில் 08 ஏக்கர் கன்று நடப்பட்டு பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், 2023 ஒக்தோபர் இறுதியளவில் 06 ஏக்கர்களில் மாத்திரம் தேயிலைக் கன்றுகள் நடப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன், மீதியான 02 ஏக்கர்களில் தரையை தயாரித்தல் மாத்திரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | நிறுவனத்தில் நிலவிய நிதி நிலைமைச் சிக்கலினால் ஒப்பந்தம் வழங்குதல் தாமதாகியிருந்தது. | |
| (ஈ) | பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.3.11 மற்றும் 5.4.8 இற்கு இணக்கமில்லாத வகையில் அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தில் கெலேபொக்க தேயிலை தொழிற்சாலையில் Furnace இயந்திரத்தின் திருத்த வேலைக்குரிய ரூபா 1.435 மில்லியனிற்கான பெறுகையின் போது விலைகூறல் பாதுகாப்பு முறி மற்றும் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று இன்றி உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இந்த கருமத்தை மேற்கொள்வதற்கு Tirma Holdings நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அப்போது நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி நிலைமை காரணமாக அவர்களினால் விலைகூறல் பாதுகாப்பு முறி அல்லது செயலாற்றுகை பாதுகாப்பு முறி சமர்ப்பிப்பதற்கு விருப்பம் தெரிவிக்காமையால் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்துடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்று மேற்கொண்டு கெலேபொக்க தேயிலை தொழிற்சாலையின் Furnace இயந்திரத்தின் திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டது. தோட்டத் தொகுதியில் மேற்கொள்ளப்படும் திருத்த வேலை அலுவல்களின் போது அந்த கருமம் உரிய முறையில் நிறைவேற்றப்பட்டதற்காக தோட்ட அத்தியட்சகரினால் மேற்கொள்ளப்படும் பரிந்துரை மீது பொது முகாமையாளரின் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு நடவடிக்கைகள் மேற்கொள்ளல் முறையான செய்முறை ஒன்றின் படி மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க திருத்த வேலைகளுக்காக விலைகூறல் பாதுகாப்பு முறி ஒன்று மற்றும் செயலாற்றுகை பாதுகாப்பு முறி ஒன்று பெற்றுக்கொள்ள வேண்டும். |

## 3.3 மனித வள முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 நவம்பர் 18 திகதிய 2021/01 இலக்கம் கொண்ட பொது முயற்சிகளுக்கான நல்லாளுகை வழிகாட்டல் கோவையின் பந்தி இலக்கம் 3.2 இன் பிரகாரம் ஏதேனும் பதவியொன்றிற்கு ஆட்சேர்க்கும் போது காணப்பட வேண்டிய கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் உட்படுத்தப்பட்டு தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செயற்படு முறைமை இதுவரை அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது கூட்டுத்தாபனத்திற்காக தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செயற்படு முறைமை வரிசை அமைச்சின் மூலம் 2021 மார்ச் மாதம் முகாமைத்துவச் சேவை திணைக்களத்திற்கு அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. அதனை மீண்டும் திருத்தி 2022 ஜனவரி மற்றும் 2023 மே மாதம் வரிசை அமைச்சின் மூலம் முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டது. அதன் பின்னர் பிரதி பொது முகாமையளார் (நிருவாகம் / மனிதவளம்) இனால் தொலைபேசியில் கலந்துரையாடி விரைவாக அங்கீகாரம் பெற்றுத் தருமானறு முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தை கோரியுள்ளது. | ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு செய்படுமுறைமைக்கான அங்கீகாரத்தை விரைவாக பெற்றுக்கொள்வதற்காக கூட்டுத்தாபனத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2018 ஜூலை 18 திகதிய 03/2018 இலக்கம் கொண்ட முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையின் பந்தி II பிரகாரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் காணப்படாத நிருவாக உதவியாளர், வேலை மேற்பார்வையாளர், உதவிக் கணக்காளர் மற்றும் அலுவலக உதவியாளர் 04 பதவிகளுக்காக நியமனம் வழங்கப்பட்டு அந்த உத்தியோகத்தர்களுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2.66 மில்லியன் தொகை செலவொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. | நிருவாக உதவியாளர், வேலை மேற்பார்வையாளர், உதவிக் கணக்காளர் மற்றும் அலுவலக உதவியாளர் - பிராந்திய அலுவலகம் ஆகிய 04 பதவிகளுக்காக 2017 ஆண்டிற்கு முன்னர் வழங்கப்பட்ட பதவிகளாக காணப்படுவதுடன், 2017 ஆண்டின் போது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் போது தவறுதலாக இந்த பதவிகளுக்காக சமர்ப்பித்தல் மேற்கொள்ளப்படவில்லை. அதேபோல், இந்த பதவிகள் தனிப்பட்ட முறையில் அங்கீகரிப்பதற்காக வரிசை அமைச்சின் மூலம் 2022.10.18 மற்றும் 2023.03.15 திகதிகளில் தேசிய சம்பள ஆணைக்குழுவின் அங்கீகாரத்திற்காக | குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் பூர்வாங்க அங்கீகாரத்தின் மீது உத்தியோகத்தர் சேர்த்தல் மற்றும் கொடுப்பனவு செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

அனுப்பப்பட்டது. இதுவரை சம்பள ஆணைக்குழுவினால் அல்லது முகாமைத்துவ சேவைத் திணைக்களத்திலிருந்து பதில் அனுப்பியிருக்காமையால் மீண்டும் ஞாபகமூட்டல் கடிதம் ஒன்று அனுப்பப்படும் என அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது.